
|| ஶ்ரீ: ||

# ஸத்யோஜாத விதான ஶிவபூஜா

ஶ்ரீ ருத்ர பாட யந்த்ரம்




பாஸ்கர ப்ரகாஶ ஆஶ்ரமம்

ஆசிரியர்

ரகு ரங்கநாதன் யக்ஞரத்னம்

|| ஶ்ரீ: ||

# ஶ்ரீ போதாயனோக்த மஹாந்யாஸ ஸஹித
# ஶ்ரீ ப்ரகாஶாநந்தநாத ப்ரகாஶித
# ஶ்ரீ ஸ்வபாவாநந்தநாத ஸங்கலித
# ஸத்யோஜாத விதான ஶிவ பூஜா

BHASKARA PRAKASHA ASHRAM

# ஶ்ரீ போதாயனோக்த மஹாந்யாஸ ஸஹித
# ஶ்ரீ ப்ரகாஶாநந்தநாத ப்ரகாஶித
# ஶ்ரீ ஸ்வபாவாநந்தநாத ஸங்கலித
# ஸத்யோஜாத விதான ஶிவ பூஜா

Copyright © BHASKARA PRAKASHA ASHRAM

All rights reserved. No part of this book may be reproduced, stored in a retrieval system, or transmitted in any form or by any means—electronic, mechanical, photocopy, recording, or otherwise—without prior written permission of the publisher.

**Published by:** BHASKARA PRAKASHA ASHRAM

**Author:** Sri Raghu Ranganathan Yegnarathnam

**First Edition***: 2025*

**For copies contact:**

**+91 73388 46571 and +1 415 619 2788**

**(No calls - Whatsapp messages only)**

**or email:** raghu@bpasrm.org


॥ ஸ்ரீ மஹாக$_3$ணபதயே நம: ॥

॥ ஸ்ரீ ஸாம்ப$_3$பரமேஶ்வராய நம: ॥



ஶிவ ஶக்தி ஸமாரம்பா$_4$ம் பா$_4$ஸ்கராசார்ய மத்$_4$யமாம் |

அஸ்மத் ஸ்ரீ நாத$_2$ பர்யந்தாம் வந்தே$_3$ கு$_3$ரு பரம்பராம் ॥




श्री श्री जगद्गुरु शङ्कराचार्य महासंस्थानम्,
दक्षिणाम्नाय श्रीशारदापीठम्, शृङ्गेरी
**Sri Sri Jagadguru Shankaracharya Mahasamsthanam**
**Dakshinamnaya Sri Sharada Peetham, Sringeri - 577 139.**


श्रीमतो रघु रङ्गनाथ यज्ञरत्नस्य विषये सप्रणति निवेदनम् ।

दक्षिणाम्नायशृङ्गगिरिशारदापीठस्य पारम्परिकशिष्यवंशे जातः भवान् शृङ्गगिरिक्षेत्रे जगद्गुरुमहास्वामिनां दर्शनं विधाय तेषां सन्निधौ भवत्सङ्कलितं सद्योजातविधानशिवपूजा इति ग्रन्थं समार्पयत् । तं च जगद्गुरुश्रीचरणाः अवालोकयन् ।

अस्मिन् ग्रन्थे परमशिवाराधनोपयुक्ताः महान्यास-रुद्रचमकादिमन्त्र-षोडशोपचारपूजादयो नैके विषयाः विस्तृततया सङ्गृहीताः सन्ति ।

अयं च ग्रन्थः आस्तिकजनोपकाराय देवनागर्यादिनानालिपिषु मद्रपुरीस्थ भास्कर-प्रकाशाश्रमद्वारा प्रकाश्यते इति विदित्वा जगद्गुरुश्रीचरणाः प्रसन्नान्तःकरणा अभूवन् ।

श्रीशारदाचन्द्रमौलीश्वरयोः असीमकृपया सोऽयं ग्रन्थः भगवदाराधकानां महान्तमुपकारं जनयतु , एतत्सङ्कलन-प्रकाशन-मुद्रणादिकार्येषु कृतपरिश्रमाः समेऽपि सज्जनाः श्रेयःपरम्पराभिस्समभिवर्धन्तामिति जगद्गुरुमहास्वामिनः आशासते ।

11-2-2026 बुधवासरः

शृङ्गगिरिः

इति

SRI SHARADA PEETHAM * SRINGERI-577139


Phone: 08265 - 250123 / 250192 • Fax: 08265 - 250792
E-mail: info@sringerisharadapeetham.org • www.sringerisharadapeetham.org



This is regarding the offering of **Śrī Raghu Raṅganātha Yajñarātnaṃ**.

Having been a follower of the traditional practices of the **Dakṣiṇāmnāya Śṛṅgeri Śāradā Pīṭham**, you had the sacred occasion to obtain darśana of the **Jagadguru MahāSwamigal** at the holy kṣetra of **Śṛṅgeri**. In His august presence, you submitted the work compiled by you, entitled **"Sadyojāta Vidhāna Śiva Pūjā."** The revered **Jagadguru Śrīcaraṇa**, graciously reviewed the said work.

In this text, following the established traditions handed down through the lineage, a variety of procedures have been systematically and elaborately set forth for performing **Paramaśiva ārādhana**. The rituals pertaining to **Mahānyāsa**, **Rudra**, **Camaka**, **Ṣoḍaśopacāra Pūjā**, and many other subjects have been compiled in detail.

The revered Jagadguru felt extremely happy to know that **Bhāskara Prakāśa Āśrama** from **Madrāpurī (Chennai)** has published this work, which has been composed for the benefit of the **āstika** community in Devanāgarī and in different languages.

By the boundless grace of **Śrī Śāradā** and **Śrī Candramauleśvara**, may this work bring great benefit to all who wish to perform **Bhagavat-ārādhana**. The **Jagadguru MahāSwamigal** blesses that this publication fosters the welfare of everyone, including all those noble individuals who have devoted their efforts to its publication, printing, and related undertakings. May this contribute to the preservation and growth of the sacred tradition.

**Dated:** 11 February 2026 (Wednesday)
**Śṛṅgeri**



Website : www.kamakoti.org.
email : kanchimutt@gmail.com

Contact : 044-27222115
Acts : 044-27224236
Cell : 9445421115

II Sri Chandramouleeswaraya Nama: ||

Sri Sankara Bhaghavadpadacharya Paramparagatha Moolamnaya Sarvajnapeeta

His Holiness Sri Kanchi Kamakoti Peetadhipathi

**JAGADGURU SRI SANKARACHARYA SWAMIGAL**

**Srimatam Samsthanam**

No. 1, Salai Street, Kancheepuram - 631 502, Tamilnadu State, INDIA.

## ॥ श्री-महात्रिपुरसुन्दरी-समेत चन्द्रमौलीश्वराय नमः ॥

परमहंस-परिव्राजक-आचार्यवर्य-जगद्गुरु-श्रीमत्-शङ्करभगवत्पादानाम्
अधिष्ठाने श्री-काञ्ची-कामकोटि-मूलाम्नाय-सर्वज्ञ-पीठे
सिंहासनाभिषिक्तानां जगद्गुरु-श्रीमद्-जयेन्द्रसरस्वती-शङ्कराचार्य-
स्वामिनाम् अन्तेवासिवर्यैः

**जगद्गुरु-श्रीमत्-शङ्करविजयेन्द्रसरस्वती-शङ्कराचार्य-स्वामिभिः**
**अनुगृहीतं श्रीमुखम्**

शिव-रहस्ये नवमे अंशे षोडशे अध्याये "भस्मदिव्य त्रिपुण्ड्राङ्को रुद्राक्षाभरणोज्ज्वलः । तार रुद्रार्थ पारीणः शिव-लिङ्गार्चन-प्रियः ।।" इति श्री भगवत्पादानां वर्णनं वर्तते । "कलौ लिङ्गार्चायां भवति हि विमुक्तिः परतरा" इति च परमेश्वरस्य तत्र तान् प्रति वचनम् । ते च "तद् योग भोग वर सिद्धि विमुक्ति नाम लिङ्गार्चनाधिगत दिग्विजय"- तया काञ्च्यां सिद्धिम् अवापुः इति च तत्रैव ।

इत्थं शिवरहस्ये महाभारते शिव महापुराणे स्कान्दपुराणे एवं बहुत्र शिवार्चन प्रभावः अभिहितोऽस्ति । श्रीमद् भागवते च शिव-नाम-प्रभावोऽपि । लोकेऽस्मिन् नानाविध क्लेशसङ्कुले कलियुगे विशेषतः "भक्त-वत्सलः, कृपा-निधिः" परमेश्वरः एक एव शरणी करणीयः सर्वविध रक्षायै सर्वविध कल्याण समृद्धये च ।

अतः भास्कर प्रकाश आश्रम नाम्न्या संस्थया यद् अधुना "सद्योजात विधान शिव पूजा" इति पुस्तकं प्रकाशितं तद् नितराम् औचित्यम् आवहति । इयं च पद्धतिः बोधायनसूत्र मूलिका श्रीप्रकाशानन्देन्द्र सरस्वती स्वामिभिः अनुसृतं सम्प्रदायम् अनु तत्र-तत्र बीजाक्षरैः वैदिक-मन्त्र-विशेषैश्च वर्धिता, तेभ्यः स्वामिभ्यः शिष्य-परम्परया प्राप्ता अधुना लोक-कल्याणाय प्रकाश्यते । (पूर्वम् एभिः स्वामिभिः श्री लक्ष्मीनारायण शास्त्रिवर्य विरचिता यति धर्म प्रदीपिका प्रकाशिता आसीत् ।) अस्मिन् पुस्तके एतत् पद्धति अनुसारेण न्यासाः सविस्तरं प्रतिपादिताः तथा सूक्त-विशेषाः, नामावली-स्तोत्रादयः मन्त्र विभागाः इत्येतत् सर्वं प्रयत्न विशेषेण संयोजितम् ।

आशास्महे भगवतः महात्रिपुरसुन्दरी सनाथस्य चन्द्रमौलीश्वरस्य अनुग्रहेण एतत् पुस्तकं परिशीलयन्तः शिवोपासनायां प्रेरणां प्राप्य सर्वाणि श्रेयांसि अश्नुवीरन् इति ।

**यात्रा-स्थानम्** – तिरुपति नारायणस्मृतिः

शाङ्कराब्दः २५३४, विश्वावसु-तुला-कार्त्तिक-मासे कृष्ण एकादशी स्थिर-वासरः
(२०२५ नवम्बर् १५)



Namaskārams to Lord **Candramouliśvara**, together with **Śrī Mahātripurasundarī**.

This benedictory message has been graciously issued by the revered **Jagadguru Śrī Śaṅkaravijayendra Sarasvatī Śaṅkarācārya Swāmīgal**, an eminent disciple of the **Jagadguru Śrīmad Jayendra Sarasvatī Śaṅkarācārya Swāmīgal**, who was duly consecrated upon the throne of the **Sarvajña Pīṭha** of the **Śrī Kāñcī Kāmakoṭi Mūlāmnāya**, established in the lineage of the **Paramahaṁsa Parivrājakācārya**, the most revered **Jagadguru Śrī Śaṅkarabhagavatpāda**.

In the **Śiva-rahasya**, in the ninth section and sixteenth chapter, there occurs a description of **Śiva** given by Bhagavatpāda as:

**"भस्म-दिव्य-त्रि-पुण्ड्राङ्को रुद्राक्षाभरणोज्ज्वलः |**

**तार-रुद्रार्थ-पारीणः शिव-लिङ्गार्चन-प्रियः ||"**

**bhasma-divya-tripuṇḍrāṅko rudrākṣābharaṇojjvalaḥ |**
**tāra-rudrārtha-pārīṇaḥ śiva-liṅgārcana-priyaḥ ||**

"He is adorned with the divine tripuṇḍra of sacred ash, resplendent with rudrākṣa ornaments, deeply versed in the inner meaning of the praṇava and the Rudra mantras, and devoted to the worship of the Śiva-liṅga"

Further, it is stated therein by **Parameśvara** that in the **Kali-yuga**, supreme liberation indeed arises through the worship of the **Śiva-liṅga**, and that He, blessing **Śaṅkara**, presented him with five **sphaṭika-liṅgas** and instructed him to arrange for their worship for the welfare of the universe, also indicating the mode of worship. (It is learnt that **Śaṅkarācārya** placed one **sphaṭika-liṅga**, the **Mukti-liṅga,** at **Kedāranāth**, and consecrated the **Vara-liṅga** at **Nīlakaṇṭha-kṣetra** in Nepal. With the other three, he returned to the south. He installed the **Bhoga-liṅga** for worship at the **Śāradā Pīṭha** in Karnataka, sent the **Mokṣa-liṅga** to **Cidambaram** for worship in the temple of **Śrī Naṭarāja**, and retained the **Yoga-liṅga** for his own personal worship and for his successors at **Kāñcī.**) It is also stated there that **Bhagavatpāda** attained **siddhi** in **Kāñcī**.

Thus, in the **Śiva-rahasya**, the **Mahābhārata**, the **Śiva-mahāpurāṇa**, the **Skanda-purāṇa**, and in many other places, the greatness and power of **Śivārcana** have been declared. In the **Śrīmad Bhāgavata** also, the glory of the divine name of **Śiva** has been proclaimed.

In this world, which is filled with many kinds of afflictions, especially in the **Kali-yuga**, the Supreme Lord—who is **bhakta-vatsala** and a **kṛpā-nidhi**—is alone to be taken as refuge, for all forms of protection and for all forms of welfare and prosperity.

Therefore, the book titled **"Sadyojāta Vidhāna Śiva Pūjā,"** which has now been published by the institution known as **Bhāskara Prakāśa Āśramam**, is highly appropriate.

This method, based on the **Bodhāyana-sūtras**, follows the tradition adhered to by **Śrī Prakāśānandendra Sarasvatī**

**Swāmīgal**; it has been further enriched, in various places, by the incorporation of **bījākṣaras** and specific **Vaidika-mantras**. Having been handed down through the lineage of **Śrī Swāmigal's** disciples, it is now being published for the welfare of the world. Previously, **Śrī Swāmigal** had also published the work **Yati-dharma-pradīpikā**, composed by the revered **Śrī Lakṣmīnārāyaṇa Śāstrī** (Śrī Swamigalgal's **pūrvāśrama** maternal grandfather).

In this book, according to this method, the **nyāsas** have been expounded in detail; likewise, specific **sūktas**, **nāmāvalīs**, **stotras**, and various divisions of **mantras**—this entire body of material has been carefully compiled with special effort.

We pray that, by the grace of Lord **Candramouliśvara** and **Mahātripurasundarī**, those who study and practice this book receive guidance in the worship of **Śiva** and may thereby attain all auspicious blessings.

**Nārāyaṇa-smṛtiḥ**
Place: **Tirupati**
**Śaṅkarābda 2534**, in the month of **Kārttika (Tulā)**,
on **Kṛṣṇa Ekādaśī**, on a Wednesday (15 November 2025)

# श्री अमृतानन्द सरस्वती स्वामी
# कामकोटि निलय - वाराणसी



नारायणः श्रीगुरुभ्यो नमः । शिवाय गुरवे नमः ।

कञ्चित्कालम् उमामहेश भवतः पादारविन्दार्चनैः
कञ्चिद् ध्यानसमाधिभिश्च नतिभिः कञ्चित्कथाकर्णनैः।
कञ्चित् किञ्चिदवेक्षणैश्च नुतिभिः कञ्चिद्दशामीदृशीम्
यः प्राप्नोति मुदा त्वदर्पित मनाः जीवन् स मुक्तः खलु ॥

श्रीगुरुभ्यो नमः। शिवाय गुरवे नमः। श्री साम्बसदाशिव परब्रह्मणे नमः।

लोके भगवान् शिवः महेश्वरः विश्वनाथः प्रणतार्तिहा आशुतोषी सर्वैरेव जनैः सर्वदा सम्पूज्योऽस्ति। स एक एव योग्यायोग्यविचारणां विना सर्वान् समनुगृह्णाति।

सः केवलं ध्यानमात्रेणापि अत्यन्तं तुष्टो भवति। तादृशः सन्तुष्टः भगवान् नान्यत्र दृश्यते। तादृशः सर्वैरेव जनैः पूज्यः। लोके सर्वे जनाः क्लिश्यन्ति पुनः पुनः

"पुनरपि जननं पुनरपि मरणं पुनरपि जननीजठरे शयनम्"

इति सर्वदैव एवमेव कुर्वन्ति। तादृशजनानां जन्ममरणादि दुःखं कथं निस्सरति इत्युक्तौ जननमृतियुतानां सेवया देवतानां

न भवति सुखलेशः संशयो नास्ति तत्र।
अजनिममृतरूपं साम्बमीशं भजन्ते य
इह परम सौख्यं ते हि धन्या लभन्ते॥

अतः धन्या एव एतादृशं धन्यत्वं लभन्ते । अतः सर्वदैव भगवान् पूज्यः। तस्य भगवतः शिवस्य स्वरूपं किम्?

नो ते गोत्रं नापि जन्मापि नाख्या नो वा रूपं नैव शीलं न देशः।
इत्थंभूतोऽपीश्वरस्त्वं त्रिलोक्याः सर्वान् कामान् पूरयेः तद् भजे त्वाम्॥

एतादृशं स्वरूपमस्ति सर्वकामप्रपूरकोऽस्ति परब्रह्मस्वरूप एव विद्यते। अतः सर्वदैव स एव नन्तव्यः, सर्वैः सर्वदैव स एव मन्तव्यः, सर्वेऽव स एव नित्यः।

त्वत्तः सर्वः त्वं हि सर्वं स्मरारे, त्वं गौरीशः त्वं च नग्नोऽसि शान्तः।
त्वं वै वृद्धस्त्वं युवा त्वं च बालः, तत् किं यत्तन्नास्ति अतस्त्वान्नतोऽस्मि॥

त्वं कीदृशो नासि? त्वमेव सर्वमसि। अतः त्वमेव सर्वदा सर्वैः पूज्योऽसि। इत्येवं सर्वैः उपासकैः अयमेव पूज्यः इति -

उपासकानां यदुपासनीयम्
उपात्तवासं वटशाखिमूले।
तद्धाम दाक्षिण्य दिषास्त्वमूर्त्या
जागर्तु चित्ते बहुबोधरूपम्॥

स दक्षिणामूर्तिरूपेण स एव सर्वेषाम् अज्ञानं नाशयति इति हेतोः स एव सर्वैः सर्वदा स्मर्तव्यः इति। एवमेव आचार्यपादैः सर्वदैव उच्यते -

प्रातर्भजामि मनसो वचसोऽनुगम्यम्
वाचो विभान्ति निखिला यदनुग्रहेण।
यन्नेतिनेतिवचनैर्निगमा अवोचन्
तं देवदेवमजमच्युतमाहुरग्र्यम्॥

इत्यादि श्लोकेषु तदेव पुनः पुनः सर्वैरेव उच्यते। अतः एतादृशः भगवान् सर्वैः सर्वदैव स्मर्तव्यः, स एव चिन्तनीयः। अत एव अन्यत्र दण्डकादिषु एवमेव स्थितिर्वर्ण्यते –

"श्रीशैलादिकृतनिषेवण कैलासशिखरभूषण तत्वार्थगोचर चन्द्रार्धशेखर पाशायुध कुलाद्यतिस्मितापाङ्ग कोपारुणकटाक्षभस्मितानङ्ग सस्मितापाङ्ग ऊरीकृतविभूतिदिव्याङ्ग रागगौरीकृतपरिगृहीत सव्याङ्गभावाङ्गारुषङ्ग पाविता नरास्थिदेशगङ्गातरङ्ग भासित जटाप्रदेश वन्दनाभिरत आखण्डलस्यन्दनायित भूमण्डल आश्रितपददासा तापसकदम्ब चक्रीकृतार्क शीतकर बिम्ब" इत्यादिना तस्यैव वर्णनं क्रियते।

तादृशस्य भगवतः शिवस्य पूजा सर्वदैव सर्वैः कर्तव्या इति हेतोः भास्करप्रकाशाश्रमस्थैः महात्मभिः परम्पराशुद्धैः "सद्योजातविधान शिवपूजा" एका सुविनिर्मिता विद्यते। यत्र च ग्रन्थे सर्वस्वमस्ति पूजायाः। तत्र सर्वप्रथमं गुरुस्तुतिरस्ति। तत्र पूर्वाङ्गपूजादिकं विस्तृततया लिखितमस्ति। यत्र सङ्कल्पादारभ्य कलशपूजा, शक्तिषडङ्गन्यासादिकं, श्रीकण्ठ मातृकान्यासादिकं, शिवपञ्चाक्षरमन्त्रादिकं च अत्र विद्यते। महन्न्यासस्य प्रामाणिकः पाठः तत्र उपलभ्यते। सर्वप्रामाणिकः पाठः अत्र उपलभ्यते। शैवपीठपूजा विद्यते, आवाहनादिकमस्ति। तथा सद्योजातविधान षोडशोपचार पूजाप्यत्र विराजते। अभिषेकमन्त्राः अत्र राराजन्ते। अनेकेषां मन्त्राणां सङ्ग्रहः अत्र विद्यते। शिवोपासनामन्त्राः विद्यन्ते। शिवाष्टोत्तर-शिवाथर्वशीर्ष-नन्दिकेश्वरपूजादिकं बलिप्रदानादिकं च अत्र अस्तीति महान् प्रामाणिकः अयं ग्रन्थः सर्वैरेव सर्वदा सेव्यः, सर्वैरेव सर्वदा ध्यातव्यश्च ग्रन्थः अत्र विद्यते इति हेतोः अयं अवश्यं सर्वैः धर्तव्यः विद्यते। सर्वो लोकः अनेन ग्रन्थेन उपकुर्यात् इत्येवं विचिन्तयामहे।

एवं भास्करप्रकाशाश्रमस्थानां महान्तं परिश्रमं उपलक्ष्य मदीयं मनः अत्यन्तं प्रसन्नतामेति। तत्र विद्यमानाः सर्वेऽपि आहिताग्नयः संन्यासिनः महती परम्परा विद्यते। विमर्शनन्दनाथाः, प्रकाशानन्दनाथाः, रामानन्दनाथाः इत्येवं परम्परा महती परम्परा विस्तृता विद्यते। तामेतां परम्परां स्मारं स्मारं मोमुद्यते नश्चेतः। अतः एषां परिश्रमः सफलो भूयात्। इमे आश्रमस्थाः ज्ञानप्रकाशआश्रमस्थाः पुनः पुनः एतादृशान् ग्रन्थान् अनेकान् एवं निर्माय लोकार्थं प्रकाशयेयुः इति च भगवन्तं उमाजानिम् अवश्यं अहं सम्प्रार्थये। नारायण नारायण नारायण नारायण नारायण नारायण नारायण नारायण नारायण।

वामार्धविद्युत्प्रतिमप्रभाय, वाचामनःकर्मविमोचनाय।
वागीश्वरीसूक्ष्मवराय नित्यं, तस्मै वकाराय नमः शिवाय॥
इत्येवं भगवन्तं पुनः पुनः सम्प्रार्थये इति शम्।
नारायण नारायण नारायण।

**Śrī Amṛtānanda Sarasvatī Svāmigal**
**Kāmakoṭi Nilaya, Vārāṇasī**



Salutations to **Nārāyaṇa**. Salutations to the revered **Gurus**.
Salutations to **Śiva**, the Guru.

**kañcitkālam umāmaheśa bhavataḥ**
**pādāravindārcanaiḥ**
**kañcid dhyānasamādhibhiśca natibhiḥ**
**kañcitkathākarṇanaiḥ |**
**kañcit kiñcidavekṣaṇaiśca nutibhiḥ**
**kañciddaśāmīdṛśīm**
**yaḥ prāpnoti mudā tvadarpitamanaḥ**
**jīvan sa muktaḥ khalu ||**
**śrīgurubhyo namaḥ | śivāya gurave namaḥ |**
**śrī sāmbasadāśiva parabrahmaṇe namaḥ |**

O **Umā-Maheśvara**, by worshipping Your lotus feet; even for a few moments—by meditation and **samādhi**; by prostrations; by listening to sacred narratives; by seeing and by offering praises—one who has surrendered his mind to You is indeed liberated.

In this world, Lord **Śiva**—**Maheśvara**, **Viśvanātha**, the remover of the suffering of those who bow to Him, and easily pleased—is worthy of worship by all people at all times. He alone bestows grace upon all, without any consideration of whether they are worthy or unworthy.

He becomes supremely pleased even by mere meditation. Such a Lord, who is so easily satisfied, is not seen elsewhere.

Therefore, He is worthy of worship by all.

**"punarapi jananaṃ punarapi maraṇaṃ**
**punarapi jananījaṭhare śayanam"**

In this world, all beings suffer repeatedly: again birth, again death, again lying in the womb of the mother. Thus do they continue endlessly. How is the suffering of birth and death to be overcome? It is declared that by mere engagement in worldly existence, not even the slightest trace of happiness is obtained—there is no doubt in this.

**jananamṛtiyutānāṃ sevayā devatānāṃ,**
**na bhavati sukhaleśaḥ saṃśayo nāsti tatra |**
**ajanimṛtarūpaṃ sāmbamīśaṃ bhajante,**
**ya iha parama saukhyaṃ te hi dhanyā labhante ||**

Those who worship **Sāmbāśiva**, who is unborn and of immortal nature, attain supreme happiness here itself; they indeed are blessed. Therefore, such persons alone are truly blessed who attain this blessedness. Hence, the Lord is to be worshipped at all times. What indeed is the nature of that Lord **Śiva**?

**no te gotraṃ nāpi janmāpi nākhyā,**
**no vā rūpaṃ naiva śīlaṃ na deśaḥ |**
**itthambhūto'pīśvarastvaṃ trilokyāḥ,**
**sarvān kāmān pūrayeḥ tad bhaje tvām ||**

You have no lineage, no birth, no name, no form, no qualities, and no limitation of place. Even being of such a nature, O Lord, You fulfill all the desires of the three worlds—therefore I worship You. Such is His nature—He is the fulfiller of all desires and is indeed of the nature of the **Parabrahman**. Therefore, He alone is always to be bowed to; by all, at all times, He alone is to be contemplated; He alone is eternal.

**tvattaḥ sarvaḥ tvaṃ hi sarvaṃ smarāre,**
**tvaṃ gaurīśaḥ tvaṃ ca nagno'si śāntaḥ |**
**tvaṃ vai vṛddhastvaṃ yuvā tvaṃ ca bālaḥ,**
**tat kiṃ yattannāsti atastvānnato'asmi ||**

From You arises everything; You indeed are everything, O destroyer of **Kāma**. You are the Lord of **Gaurī**; You are also

beyond attributes, serene. You are old, You are young, You are also a child—what is there that You are not? Therefore, I bow to You. What are You not? You alone are everything. You alone are always worthy of worship by all.

**upāsakānāṃ yadupāsanīyam**
**upāttavāsaṃ vaṭaśākhimūle |**
**taddhāma dākṣiṇya diṣāstvamūrtyā**
**jāgartu citte bahubodharūpam ||**

Thus, by all devotees, He alone is to be worshipped. That which is worthy of worship for devotees—abiding beneath the banyan tree, assuming a form that radiates knowledge in all directions—may that Supreme Abode, in the form of **Dakṣiṇāmūrti**, awaken in the heart as the embodiment of supreme knowledge.

He, in the form of **Dakṣiṇāmūrti**, destroys the ignorance of all; therefore He alone is always to be remembered by all. As **Bhagavatpāda Ācārya** says:

**prātarbhajāmi manaso vacaso'nugamyam**
**vāco vibhānti nikhilā yadanugraheṇa |**
**yannetinetivacanairnigamā avocan taṃ**
**devadevamajamacyutamāhuragryam ||**

"I worship in the morning that Supreme, who is beyond the reach of mind and speech, by whose grace all words shine, whom the Vedas describe as '**neti neti (not this, not this)**,' that God of gods, unborn, imperishable, supreme."

In such verses, this truth alone is repeatedly declared. Therefore, such a Lord is to be remembered by all at all times; He alone is to be contemplated.

Likewise, in other hymns and compositions, His nature is described in great detail.

**"śrīśailādikṛtaniṣevaṇa kailāsaśikharabhūṣaṇa**
**tatvārthagocara candrārdhaśekhara pāśāyudha**
**kulādryatismitāpāṅga kopāruṇakaṭākṣabhasmitānaṅga**
**sasmitāpāṅga ūrīkṛtavibhūtidivyāṅga**
**rāgagaurīkṛtaparigṛhīta savyāṅgabhāvāṅgāruṣaṅga pāvitā**
**narāsthideśagaṅgātaraṅga bhāsita jaṭāpradeśa**

**vandanābhirata ākhaṇḍalasyandanāyita bhūmaṇḍala āśritapadadāsā tāpasakadamba cakrīkṛtārka śītakara bimba"**

By such phrases, He alone is described—the Lord who is worshipped in sacred **kṣetras** such as **Śrīśaila**, who is the ornament of Mount **Kailāsa**'s summit, who is accessible through realization of the true nature of Reality, who bears the crescent moon upon His crest, whose weapon is the **pāśa**, whose wrath-red glance reduced **Kāma** to ashes, whose smiling sidelong glance is gracious, whose sacred ash is His divine bodily adornment, who has **Gaurī** as His left half, whose matted locks shine with the waves of the **Gaṅgā**, who is attended by multitudes of ascetics and surrendered devotees, and around whom even the solar and lunar orbs seem to revolve.

Therefore, since the worship of Lord **Śiva** is to be performed by all at all times, the noble scholars of **Bhāskara Prakāśa Āśramam**, belonging to an illustrious **paramparā**, have prepared this excellent work titled **"Sadyojāta Vidhāna Śiva Pūjā."** In this text, everything pertaining to worship is present.

- This **grantha** begins with **Guru-stuti**.
- Then the **pūrvāṅga-pūjā** (preliminary rituals) are described in detail.
- From **saṅkalpa** onward, **kalaśa-pūjā**, **śakti-ṣaḍaṅga-nyāsa**, **Śrīkaṇṭhādi-mātṛkā-nyāsa**, **Śiva-pañcākṣarī-mantra**, and more are included.
- An authentic version of the **Mahānyāsa** is available therein. All authoritative recitations are available here.
- **Śaiva-pīṭha-pūjā** is present; **āvāhana** and related procedures are included.
- The **Sadyojāta-vidhāna ṣoḍaśopacāra-pūjā** shines there brightly.
- **Abhiṣeka-mantras** are beautifully presented.
- A collection of many mantras is included. **Śivopāsanā-mantras** are present.
- **Śivāṣṭottara**, **Śivātharvaśīrṣa**, **Nandikeśvara-pūjā**,

**bali-pradāna**, and more are included.

Thus, this is a highly authoritative text, to be studied and practiced by all at all times. Therefore, this book is indeed to be preserved and adopted by all. We reflect that the entire world may benefit through this text.

Looking at the great effort of the members of **Bhāskara Prakāśa Āśramam**, my mind is extremely pleased. There exists a great lineage of learned ascetics there—**Vimarśānandanātha**, **Prakāśānandanātha**, **Rāmānandanātha**, and others. Reflecting upon this lineage, our hearts rejoice again and again. May their effort become fruitful. May this **Āśrama** continue to produce many such works and publish them for the welfare of the world. Thus do I earnestly pray to the Divine, **Umāpati**.

**vāmārdhavidyutpratimaprabhāya,**
**vācāmanaḥkarmavimocanāya |**
**vāgīśvarīsūkṣmavarāya nityaṃ,**
**tasmai vakārāya namaḥ śivāya ||**

Salutations to that **Śiva** whose left half shines with the brilliance of lightning, who grants liberation to speech, mind, and action, who is the subtle and supreme essence of **Vāgīśvarī**. To that eternal principle, embodied in the sacred syllable **"va"**, I offer my salutations—**namaḥ śivāya**.


**Nārāyaṇa, Nārāyaṇa, Nārāyaṇa.**
**Śrī Amṛtānanda Sarasvatī Svāmigal**
**Kāmakoṭi Nilaya, Vārāṇasī**




உ
ப்ரஹ்மைவ ஸத்யம்

**SRI SWAYAMPRAKASA AVADHUTHA SADASIVA TRUST**

Sri Sri Judge Swamigal Adhishtanam, East 7th Street,
PUDUKKOTTAI-622 001
Phone: 04322-221440, 222128
Email: sribhuvaneshwari@gmail.com

Date : 19/11/2024

ஆசியுரை

18th January 2026

सद्योजातं प्रपद्यामि सद्योजाताय वै नमो नमः।
भवे भवे नातिभवे भवस्व मां भवोद्भवाय नमः॥

With the divine grace of Śrī Bhuvaneśvara Mahādeva and Śrī Bhuvaneśvarī Devī, blessings are lovingly bestowed upon the sacred work: **Sadyojāta Vidhāna Śiva Pūjā.**

This volume from Bhāskara Prakāśa Āśramam, presented with deep spiritual understanding and scriptural precision, stands as a valuable contribution to the preservation and proper practice of Śaiva pūjā traditions rooted in the Bodhāyana Pāṭha lineage.

Through it, seekers and practitioners are guided on the path of inner sanctity, clarity, and devotion via Rudra Praśna with Anuṣaṅgam, Mahānyāsa, Ṣoḍaśopacāra Pūjā, Homa, and Arcana.

May this work uphold the light of dharma and nourish the sacred continuity of the Sūthamalli Guru Paramparā. Our heartfelt blessings and good wishes extend to Śrī Raghu Ranganatha Yegnarathnam and his family.

May the fullest grace and compassionate glance of Samba Parameśvara and Paradevatā fall on this endeavor from Bhāskara Prakāśa Āśramam. With the grace of Them, who dwell resplendent as the embodiment of Śiva-Śakti may this spiritual work continue to flourish across the world.

May all devotees who read, recite, and rejoice in Sadyojāta Vidhāna Śiva Pūjā be blessed by the Mother's infinite compassion, the grace of their Gurus--from Śrī Vimarśānanda Nathendra Sarasvatī Svāmigal onward--and the boundless blessings of the Guru Maṇḍala.


We pray to the Supreme Lord Samba Parameśvara that all be endowed with divine joy, harmony, and auspiciousness. May all devotees who read and rejoice in this work be blessed by the Mother's infinite compassion, the grace of their respective Gurus, and the boundless blessings of Sadguru Śrī Śāntānanda Mahāsvāmigal.

We pray to the Supreme Mother Śrī Bhuvaneśvarī Devī that all be endowed with divine joy, harmony, and auspiciousness.
Ānandaṃ, Śubhaṃ, Maṅgalaṃ!
Jaya Bhuvaneśvarī!
Śrī Pranavānanda Brahmendra Saraswatyāvadūta Mahāsvāmigal
Śrī Bhuvaneśvarī Pīṭham, Pudukkottai



**ஸ்ரீ ப்ரகாஶானந்த நாதேந்த்ர ஸரஸ்வதி ஸ்வாமிகள்**
**(1877-1962)**

ஸ்ரீ ஶிவஸ்வாமி தீக்ஷிதர் (ஸ்ரீ ப்ரகாஶானந்த நாதேந்த்ர ஸரஸ்வதி ஸ்வாமிகள்), ஸ்ரீவித்யையை நன்கறிந்த நிபுணரும், புகழ் பெற்ற ஸம்ஸ்க்ருத வல்லுனரும், நெறி தவறாது வைதீக கார்யங்களை தர்ம ஶாஸ்திரத்தை அனுஸரித்துச் செய்பவரும் ஆவார். நித்யாக்னிஹோத்ரியான அவர், தமது வாழ்வின் நிறைவில், ஸன்யாஸம் மேற்கொண்டு, வாரணாஸியில் மஹாஸமாதி அடைந்தார்.




ஸ்ரீ ப்ரகாஶானந்த நாதேந்த்ர ஸரஸ்வதி ஸ்வாமிகள், ஒரு ஸன்யாஸியின் வாழ்வில் மேற்கொள்ள வேண்டிய அனைத்து அனுஷ்டானங்களையும், 'யதி தர்ம ப்ரதீபிகா' என்ற நூலில் எழுதி அருளியுள்ளார். இந்நூலின் முகவுரை, பூஜ்யஸ்ரீ மஹா பெரியவா ஸ்ரீ சந்த்ரஶேகரேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகளால் எழுதப்பட்டது. ஸ்ரீ ப்ரகாஶானந்த நாதேந்த்ர ஸரஸ்வதி ஸ்வாமிகள், தமது சிஷ்யரும், நமது குருநாதருமான ஸ்ரீ விமர்ஶானந்த நாதேந்த்ர ஸரஸ்வதி ஸ்வாமிகளுக்கு, தாம் கற்ற அனைத்தையம் போதித்து நம்மை அனுக்ரஹித்துள்ளார்.



ஶ்ரீ விமர்ஶானந்த₃நாத₂ம் ஸத்யாம்பா₃ஸஹிதம் கு₃ரும்
ஹ்ருத்பத்₃மகர்ணிகா மத்₄யே பா₄வயேத் ஸர்வஸித்₃த₄யே

ஶ்ரீ ப்ரகாஶானந்த₃நாத₂ம் விமர்ஶாம்பா₃ ஸஹிதம் கு₃ரும்
ஹ்ருத்பத்₃மகர்ணிகா மத்₄யே பா₄வயேத் ஸர்வஸித்₃த₄யே

ஶ்ரீ ராமானந்த₃ நாத₂ம் ராமாம்பா₃ ஸஹிதம் கு₃ரும்
ஹ்ருத்பத்₃மகர்ணிகா மத்₄யே பா₄வயேத் ஸர்வஸித்₃த₄யே








**|| ஸ்ரீ ஸத்3கு3ருசரணாரவிந்தா3ப்4யாம் நம: ||**

# முன்னுரை

ஶ்ரீ ருத்ரம் நமது வைதீக வழிபாட்டில் மிக உயர்ந்த ஸ்தானத்தில் உள்ளது. கிருஷ்ண யஜுர் வேதத்தின் நான்காவது காண்டத்தின் மூலக்கருவாக ஶ்ரீ ருத்ரம் அமைந்துள்ளது.

ஹிந்து மதத்தின் ஒப்பற்ற தெய்வம் ஶிவபெருமான். அப்பெருமானின் சக்தி வாய்ந்த மற்றும் அருள் பாலிக்கக்கூடிய வடிவம் ஶ்ரீ ருத்ர பகவான். அவரை வழிபடக்கூடிய புராதனமான ஏடுகளில் ஒன்று ஶ்ரீ ருத்ரம். அழித்தல் மற்றும் மீளுருவாக்கல் போன்ற ஶ்ரீ ருத்ரனின் பரிணாமங்களின் திறவுகோலாகவும் இவ்வுலகின் முடிவற்ற சுழற்சியான படைத்தல், காத்தல், லயமாக்குதல் ஆகியவற்றை தன்னுள் அடக்கியதாகவும் உள்ளது ஶ்ரீ ருத்ரம். ஶக்தி வாய்ந்த ஶிவ பஞ்சாக்ஷரி மந்த்ரம் ஶ்ரீ ருத்ரத்தில் அடங்கியுள்ளது குறிப்பிடத்தக்கது.

ரிஷிகள், ஞானிகள், பண்டிதர்கள் ஆகிய அனைவரும் பக்தியுணர்வுடனும், வைதீக லயத்துடனும் பல தலைமுறைகளாக ஶ்ரீ ருத்ரத்தை பாராயணம் செய்து வருகின்றனர். அதன் அதிர்வலைகள் (Vibrations), மனதிற்கு அமைதியும், ஆறுதலும் அளித்து ஆன்மீகப் பயணத்தில் முன்னேற ஸாதகர்களுக்குப் பெரிதும் உதவுகிறது. ஶ்ரீ ருத்ரத்தை முற்றும் துறந்த ஸன்யாஸிகளும் தினமும் பாராயணம் செய்ய வேண்டியது என கைவல்ய உபநிஷத் எடுத்துரைக்கிறது. இவ்வாறான தினசரி பாராயணம் சித்த ஶுத்தியும் ஶக்தியும் அளிக்கிறது.

ஶிவபெருமானின் வழிபாட்டு முறை பல்வேறு புராணங்களிலும், தாந்த்ரீக நூல்களிலும் சொல்லப்பட்டுள்ளது. நமது குரு பரம்பரையால் வழங்கப்பட்ட வழிபாட்டு முறையை இந்த நூலானது

விளக்குகிறது. ஶிவனையும் சக்தியையும் நமது தேகத்தின் பாகங்களில் இருத்திக்கொள்ளும் முறையை ந்யாஸம் என்பது வழக்கம். முதன்முறையாக ஶ்ரீ கண்டாதி மாத்ருகா ந்யாஸத்தோடு சேர்த்து, போதாயன மஹாந்யாஸத்தையும் ( ஶ்ரீ போதாயனர் தமது சிஷ்யர்களுக்கு உபதேசித்தவாறு) இந்நூலில் அளிக்கிறோம். கூடுதலாக, முதன்முறையாக அனுஷங்கத்தோடு ருத்ர ப்ரஶ்னத்தையும் வழங்குகிறோம்.

திராவிட முறைப்படி, ஸத்யோஜாதாதி ஷோடஶோபசார பூஜை என்ற பதினாறு விதமான உபசாரங்களை ஶிவனுக்கு ஸமர்ப்பிப்பது இந்நூலில் விளக்கப்பட்டுள்ளது. திராவிட மற்றும் ஆந்திர ஸம்ப்ரதாயங்களிடையே மிகக்குறைந்த வித்யாசங்கள் இருந்தாலும், ஆந்திர பாடம் பல வைதீகர்களால் அனுசரிக்கப்பட்டாலும், திராவிட பாடம் இன்றும் சில, வைஷ்ணவ வைதீகப்பண்டிதர்களாலும் அனுசரிக்கப்படுகிறது. அடைப்புக்குறிகளில் (brackets) உள்ள வாசகங்கள் ரிஷிகளால் சிஷ்யர்களுக்கு வழங்கப்பட்ட வழிமுறைகள்(instructions) அல்லது விருப்ப (optional) மந்த்ரங்கள் ஆகும்.

இடைவிடாது ருத்ர மந்த்ரத்தைக் கூறுவதான ஜப யக்ஞத்தைத் தொடர்ந்து ருத்ர அபிஷேகம், ஹோமம் மற்றும் அர்ச்சனை செய்வது நமது வழிபாட்டிற்கு மேலும் ஶக்தியூட்டுகிறது. அதிருத்ரம் என்பது ஶ்ரீருத்ரத்தால் 14,641 முறை ஜபம் செய்வதும், 1331 முறை ஹோமம் செய்வதும் ஆகும். ருத்ர ஹோமம் என்பது ருத்ர மந்திரத்துடன் 'ஸ்வாஹா' என்று ஒவ்வொரு ஆஹுதியுடனும் சொல்லி அக்னி பகவானுக்கு நெய்யைச் சமர்ப்பிப்பதாகும்.

ஸ்ரீவித்யா குரு ஸ்ரீ விமர்ஶானந்த நாதேந்த்ர ஸரஸ்வதி ஸ்வாமிகளான எனது குருவிடமிருந்து பல்வேறு முறைகளில் ருத்ர ஹோமம் செய்யப் பயிற்சி பெற்றது எனது பாக்கியமே. எனது தந்தையார் ஸ்ரீ K R யக்ஞரத்னம் மற்றும் மதுரை ஸ்ரீ சுப்ரமண்ய சாஸ்திரிகள் ஆகியோர் பல்வேறு ப்ரமாணங்களை எனக்களித்து பேருதவி செய்துள்ளார்கள்.

இவற்றை அடிப்படையாகக் கொண்டு இயற்றப்பட்ட இந்நூலில் கூறப்பட்டுள்ள பல்வேறு வழி பாட்டு முறைகளும், ஹோமம் செய்ய விழையும் அன்பர்களுக்கு, ஹோமத்தின் நுணுக்கங்களைப் புரிந்து கொள்ள ஹேதுவாக இருக்கும் என்று நம்புகிறோம். "ஸ்வாஹா" என்பதை "நம:" என்று மாற்றி இந்த ருத்ர விபாகத்தை அர்ச்சனை செய்யவும் பயன்படுத்திக் கொள்ளலாம்.
'பில்வ' என்ற 'வில்வ' அஷ்டோத்தரமும் ருத்ர அர்ச்சனை மற்றும் ஹோம மந்த்ரங்களுடன் விரிவாகக் கொடுக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீ ருத்ரமானது, த்யானம் மற்றும் ஜபத்திற்கும், ஹோமத்திற்கும், அர்ச்சனைக்கும் உரியதாக நம் பழக்கத்தில் உள்ளது. இந்நூல் பக்தர்களின் இத்தகைய பல்வேறு வழிபாட்டு முறைகளுக்கும் பயனுள்ளதாக இருக்கும் என்று உறுதியாக எண்ணுகிறோம். பக்தர்களின் வேண்டுதல்கள் அனைத்தையும் பூர்த்தி செய்யுமாறு ஸ்ரீ குரு பரம்பரையையும், ஶிவ ஶக்தி ஸ்வரூபமான ஸாம்ப பரமேஶ்வரரையும் வேண்டிக் கொள்கிறோம்.

ஸம்ஸ்க்ருதம், தமிழ், தெலுங்கு, கன்னடம் என்ற பல மொழிகளிலும் பதிப்பிக்க உதவிய அனைத்து தன்னார்வலர்களுக்கும் (Volunteers) எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிக்கிறோம்.

ஸ்ரீமதி அகிலா ரங்கநாதன், ஸ்ரீமதி மீரா கிருஷ்ணன், ஸ்ரீமதி தாரிண்யா தோடா ஆகியோரின் சிறப்பான பங்களிப்புக்கு எமது நெஞ்சார்ந்த நன்றிகளைக் கூறிக்கொள்கிறோம்.

நமது குரு பரம்பரையையும் மற்றும் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ விமர்ஶானந்த நாதேந்த்ர ஸரஸ்வதி மஹாஸ்வாமிகள் , ஸ்ரீ ஞானானந்த தீர்த்த ஸ்வாமிகள், ஸ்ரீ K R யக்ஞரத்னம், ஸ்ரீ R ராமகிருஷ்ணன் ஆகியோரையும் பக்தியோடு வணங்குகிறோம்.

'ஓம் நம: ஶிவாய ' என்ற ஸ்ரீ ருத்ர வாக்கின்படி ஸர்வ வல்லமை பொருந்திய பெருமானாகிய ஸ்ரீருத்ரனுக்கு எமது தாழ்மையான நமஸ்காரங்களை ஸமர்ப்பித்து நமது ஆன்மீகப் பயணத்திற்கு உறுதுணையாக இருக்கும்படி ப்ரார்த்திக்கிறோம்

பக்தியுடனும் நன்றியுடனும்,
ரகு ரங்கநாதன் யக்ஞரத்னம்
(காமேஶ்வர்யம்பா சமேத ஸ்ரீ ஸ்வபாவானந்த நாத)

## **நூற் குறியீடுகள்**

1. ஸம்ஸ்க்ருத அக்ஷரங்களைச் சரியாக உச்சரிக்கத் துணை எண் குறியீடுகள்

க=ka, க$_2$=kha , க$_3$=ga,  க$_4$=gha, ங

ச=ca, ச$_2$=cha , ஜ =ja,  ஜ$_2$ =jha, ஞ

ட=Ta, ட$_2$=Tha , ட$_3$=Da,  ட$_4$=Dha, ண

த=ta, த$_2$=tha , த$_3$=da,  த$_4$=dha, ந

ப=pa, ப$_2$=pha , ப$_3$=ba,  ப$_4$=bha, ம

2. ***ரு*** - ***ரு***ஷி, ***ரு***க்$_3$வேத$_3$ம், ப்***ரு***த்$_2$வி என்ற சொற்களில் உள்ள

***ரு*** - காரத்தைப் போல உச்சரிக்கவும்.(ரு-க்கும், ரி-க்கும் இடையில் வாயைக் குவிக்காமல் )

**ரு** - புருஷ, ருத்ர என்ற சொற்களில் உள்ள ரு-காரத்தைப் போல உச்சரிக்கவும். (முழு ரு -காரம் வாயைக் குவித்து)

3. வைதீகச் சிறப்பு உச்சரிப்புக்கள்

ँ - கு$_3$ம்

ᳲ – க்$_3$க்$_3$

ꣳ - அம்  என்பதை ய, ர, ல, வ, என்ற எழுத்துக்கள் தொடரும்போது இவ்வாறான சிறப்பு உச்சரிப்பு ஏற்படும் (த்ர்யம்பகம் ꣳயஜாமஹே)

# பொருளடக்கம்


1. ஶ்ரீ கு3ரு ஸ்துதி ........ 16

2. பூர்வாங்க3 பூஜா ........ 17

2.1 ஸங்கல்பம் ........ 18

2.2 கலஶ பூஜா ........ 20

3. ஶக்தி ஷட3ங்க3 ந்யாஸ: ........ 23

4. ஶ்ரீ கண்டா2தி3 மாத்ருகா ந்யாஸ: ........ 25

5. ஶ்ரீ ஶக்தி பஞ்சாக்ஷர மந்த்ர: ........ 33

6. மஹா ந்யாஸ: ........ 36

6.1 ப்ரத2ம ந்யாஸ: ........ 37

6.2 த்3விதீய ந்யாஸ: ........ 46

6.3 த்ருதீய ந்யாஸ: ........ 47

6.3.1 தி3க்ஸம்புட ந்யாஸ: ........ 49

6.3.2 ஷோட3ஶாங்க3 ரௌத்3ரீகரணம் ........ 52

6.4 சதுர்த்த2 ந்யாஸ: ........ 55

6.4.1 மனோ ஜ்யோதி: ........ 55

6.4.2 ஆத்மரக்ஷா ........ 57

6.5 பஞ்சம ந்யாஸ: ........ 60

6.5.1 ஶிவஸங்கல்ப: ........ 60

6.5.2 புருஷ ஸூக்தம் ........ 62

6.5.3 உத்தர நாராயணம் ........ 66

6.5.4 அப்ரதிரத2ம் கவசம் ........ 68

6.5.5 த்வமக்₃னேருத்₃ரமித்யனுவாக:........................................... 71

6.5.6 பஞ்சாங்க₃ ஜப:........................................................................ 74

6.5.7 அஷ்டாங்க₃ நமஸ்கார:.............................................................. 75

6.6 லகு₄ ந்யாஸ:................................................................................ 77

7. ஸத்₃யோஜாத விதா₄ன பூஜா ........................................................ 85

7.1 ஶைவ பீட₂ பூஜா......................................................................... 85

7.2 ஆவாஹனம் .................................................................................. 88

7.3 ஸத்₃யோஜாத ஷோட₃ஶோபசார பூஜா ........................................... 92

7.4 அபி₄ஷேக மந்த்ரா:........................................................................ 92

7.5 ஶ்ரீ ருத்₃ர ப்ரஶ்ன: ......................................................................... 97

7.6 சமகப்ரஶ்ன: ................................................................................. 112

7.7 புருஷ ஸூக்தம் ............................................................................ 120

7.8 ஸத்₃யோஜாதாதி₃ பஞ்ச மந்த்ரா:................................................... 123

7.9 து₃ர்கா₃ ஸூக்தம் .......................................................................... 125

7.10 ஶ்ரீ ஸூக்தம் ................................................................................ 127

7.11 ஶிவோபாஸன மந்த்ரா: ............................................................... 132

7.12 ஶிவாஷ்டோத்தர நாமாவளி:......................................................... 134

7.13 கர்ப்பூர ஹாரதி ........................................................................... 139

7.14 புஷ்பாஞ்ஜலி:.............................................................................. 140

7.15 ஶிவ அத₂ர்வஶீர்ஷம் .................................................................. 141

7.16 நமஸ்கார:................................................................................... 148

7.17 நந்தி₃கேஶ்வர பூஜா ................................................................... 148

7.18 ப₃லிதா₃னம்................................................................................ 149

## PART - 2


8. மந்த்ர புஷ்பம் .......... 151

9. பி3ல்வாஷ்டோத்தரஶதஸ்தோத்ரம் .......... 156

10. ஶிவ பஞ்சாக்ஷர ஸ்தோத்ரம் .......... 179

11. ருத்3ர அர்ச்சன மந்த்ரா: .......... 180

11.1 ஷோடா4 விபா4க3ம் .......... 180

11.2 அஷ்டாசத்வாரிஶத்3தா4 விபா4க3ம் .......... 194

11.3 ஏகோன ஸப்ததி: உத்தர ஶததா4 விபா4க3ம் .......... 210

11.4 ஏக நவதி: உத்தர த்3விஶததா4 விபா4க3ம் .......... 236

11.5 சமகம் - அர்ச்சன மந்த்ரா: .......... 261

11.6 புருஷ ஸூக்தம் - அர்ச்சன மந்த்ரா: .......... 270

11.7 ஸ்ரீ ஸூக்தம் - அர்ச்சன மந்த்ரா: .......... 275

12. ருத்3ர ஹோம மந்த்ரா: .......... 280

12.1 ஷோடா4 விபா4க3ம் .......... 280

12.2 அஷ்டாசத்வாரிஶத்3தா4 விபா4க3ம் .......... 294

12.3 ஏகோன ஸப்ததி: உத்தர ஶததா4 விபா4க3ம் .......... 310

12.4 ஏக நவதி: உத்தர த்3விஶததா4 விபா4க3ம் .......... 334

12.5 சமகம் - ஹோம மந்த்ரா: .......... 364

12.6 புருஷ ஸூக்தம் - ஹோம மந்த்ரா: .......... 373

12.7 ஸ்ரீ ஸூக்தம் - ஹோம மந்த்ரா: .......... 378

# 1. ஸ்ரீ கு$_3$ரு ஸ்துதி

நமஸ்தே நாத$_2$ ப$_4$க$_3$வன் ஶிவாய கு$_3$ரு ரூபிணே |
வித்$_3$யாவதார ஸம்ஸித்$_3$த்$_4$யை ஸ்வீக்ருதானேகவிக்$_3$ரஹ |

நவாய நவரூபாய பரமார்த்த$_2$ஸ்வரூபிணே |
ஸர்வாக்$_3$ஞானதமோபே$_4$த$_3$ பா$_4$னவே சித்க$_4$னாய தே |

ஸ்வதந்த்ராய த$_3$யாக்லுப்த விக்$_3$ரஹாய ஶிவாத்மனே |
பரதந்த்ராய ப$_4$க்தானாம் ப$_4$வ்யானாம் ப$_4$வ்யரூபிணே |

விவேகினாம் விவேகாய விமர்ஶாய விமர்ஶினாம் |
ப்ரகாஶானாம் ப்ரகாஶாய ஞானினாம் ஞானரூபிணே |

புரஸ்தாத் பார்ஶ்வயோ: ப்ருஷ்டே$_2$
நமஸ்குர்யாது$_3$பர்யத$_4$: |
ஸதா$_3$ மச்சித்தரூபேண விதே$_4$ஹி ப$_4$வதா$_3$ஸனம் |

த்வத்ப்ரஸாதா$_3$த$_3$ஹம்தே$_3$வ க்ருதக்ருத்யோऽஸ்மி
ஸர்வதா$_3$ |
மாயாம்ருத்யுமஹாபாஶாத் விமுக்தோऽஸ்மி
ஶிவோஸ்ம்யஹம் |


ப்ராத: ப்ரப்$_4$ருதி ஸாயாந்தம் ஸாயாதி$_3$ ப்ராதரந்தத: |
யத்கரோமி ஜக$_3$ன்னாத$_2$ தத$_3$ஸ்து தவ பூஜனம் |

# சிந்தித கார்யாணி அயத்னேன ஸித்₃த்₄யந்தி - பா₄வனோபநிஷத்₃

ஶ்ரீ குருப்யோ நம: ஶ்ரீ மாத்ரே நம:
நமஸ்காரங்கள்
நமது குருமண்டலம், ஶ்ரீ ஸாம்ப பரமேஶ்வரர், ஶ்ரீ சண்டிகா மஹாலக்ஷ்மி ஆகியோரின் அபார கருணையினால், வாரணாஸி(காஶி) க்ஷேத்ரத்தில், அதிருத்ரம் மற்றும் ஶதசண்டி யக்ஞங்கள் நடத்தும் பெரும் பேறு நமக்குக் கிட்டியது. இந்த க்ஷேத்ரமானது, அதிலும், கங்கை வடக்கே பாயும், வருணை மற்றும் அஸி நதிகளின் இடைப்பட்ட பகுதியானது நமது புராணங்களில் மிகப் பிரதானமாகக் கூறப்பட்டுள்ளது. நமது குருமார்கள், தென்னிந்தியாவிலிருந்து காஶிக்குச் சென்று தமது ஸாதனைகளை மேற்கொண்டு இங்கு ஸித்தியடைந்தனர். அவர்கள், தமது ஸூக்ஷ்ம ரூபத்தில் இன்றும் இங்கிருப்பதாக யாம் உணர்கிறோம். அவர்களுடைய பாத கமலங்களில் இந்த அதிருத்ர விழாவை எமது குருதக்ஷிணையாக ஸமர்ப்பிக்கிறோம்.

2024-ம் ஆண்டு , மார்ச் 27 முதல் ஏப்ரல் 3 வரை, காஶி க்ஷேத்திரத்தில், அஸி கட்டத்தில் அதிருத்ர மஹா யக்ஞம் மற்றும் ஶதசண்டி ஹோமம் நடைபெற்றது.

கங்கைக்கரையில், அஸி கட்டத்தில் கீழ்கண்டது போல் ஒரு கல்வெட்டு உள்ளது.



'ஶும்பன், நிஶும்பன் என்ற அதி பயங்கரமான அரக்கர்களைக் கொன்ற பின், தேவி தனது வாளை (Asi) பூமியில் ஓங்கி வீசியதால், பூமி பிளந்து, அஸி நதி பொங்கி உருவானது. அப்படிப்பட்ட அஸியும் கங்கையும் ஸங்கமிக்கும் இடம் தான் 'அஸி கட்டம்'.

நமது அதிருத்ர, ஶதசண்டி விழாவிற்கு இதை விடப் பொருத்தமான வேறொரு இடம் உண்டோ?
விழாவிற்கான ஏற்பாடுகள், 2023--ம் ஆண்டு ஶாரதா நவராத்ரி முடிந்தவுடனேயே தொடங்கின. ஶ்ரீ ஞானானந்த ஸ்வாமிகள், தனது ஆழ்ந்த தந்த்ர ஞானம், தொழில் நுட்ப ஞானம்- இவற்றினால் 'AutoCAD' துணை கொண்டு, விழா அமைப்புக் குழுவுடன் (Facility team) ஒருங்கிணைந்து, நுட்பமான ருத்ர மண்டலத்தை வடிவமைத்தார்.

வேத கனபாடிகள் மற்றும் வைதீகர்களை வெவ்வேறு ஊர்களிலிருந்தும், வெளிநாடுகளிலிருந்தும் விழாவிற்கு அழைத்து ஒருங்கே கூட்டுவது என்பது அதி முக்கியமான செயல். சுமார் 130 பேர்களைத் தொடர்பு கொண்டு, அழைத்து அவர்களுக்கு பயண வசதிகளையும், வைதீக ஏற்பாடுகளையும் ஶ்ரீ சுந்தா வாத்யாரும் (சென்னை), ஶ்ரீ ஸீதாராம கனபாடிகளும் (கொச்சின்) மிக நேர்த்தியாகச் செய்தனர். ஶ்ரீ ஸுப்ரமணியன் (சிகாகோ) ரித்விக்குகளுக்கு தங்கும் வசதிகளை மிகச் சிறப்பாகச் செய்தார். ஶ்ரீ சந்திரசேகர டிராவிட் (வாரணாஸி) - அவர்கள் சுமார் 40 ரித்விக்குகளை காஶியிலிருந்தே ஏற்பாடு செய்தார்.

இவ்விழாவிற்கு மிக விரிவான ஏற்பாடுகள் தேவைப்பட்டது. யக்ஞத்திற்கான சரியான இடம், அதற்கான முறையான ஒப்புதல்கள், திறந்த வெளியில் 11 யாக மண்டபங்களை அமைப்பது, ஜெனெரேட்டர்களின் மூலம் பூமியை சமன் செய்வது, ஒப்பந்தக்காரர்களுடன் வேலை மற்றும் மேற்பார்வை என ஆஶ்ரமத்தின் தன்னார்வலர்களுக்கு (Volunteers) கை நிறைய வேலையும், மனம் நிறைய ஆனந்தமும் நிரம்பி இருந்தது. விழாவிற்கு முன்பே இவைகளை கவனிக்கவும், அருகில் இருந்த ஹோட்டல்களை முன்பதிவு செய்யவும் காஶிக்கு பல முறை பயணம் செய்ய வேண்டியிருந்தது.

.

ரித்விக்குகளுக்கு சுவையான தென்னிந்திய உணவு தயாரித்து அளிக்க 30 பேர் கொண்ட குழு ஒன்று திருச்சியிலிருந்து பெரிய பெரிய பாத்திரங்கள், இயந்திரங்களுடன் காஶி வந்திறங்கின.
ஶ்ரீமதி மீரா, ஶ்ரீ கண்ணன் தம்பதியினர் உணவு பட்டுவாடா செய்யும் பொறுப்பை ஏற்றுச் செவ்வனே செய்தனர். ஶ்ரீமதி ஶுபஶ்ரீ கார்த்திக், ஆரம்பத்திலிருந்து கடைசி வரை, எல்லா விஷயங்களிலும் பக்க பலமாக மிகப்பெரிய பங்காற்றினார்.

இவ்விழாவிற்கு உதவிய தன்னார்வலர்கள் (Volunteers), உபயதாரர்கள் (Donors), கோவிலூர் மற்றும் உடுப்பி மட நிர்வாகிகள் அனைவருக்கும் எமது நெஞ்சார்ந்த நன்றிகளைத் தெரிவிக்கிறோம்.

முன்பு நாங்கள் ஒருமுறை காஶி விஜயம் செய்யும்போது, கங்கை ஆரத்தி தரிசிக்க அஸி காட்டிற்குச் சென்றோம். ஆரத்தியின் முடிவில், அதன் அமைப்பாளர்களைச் சந்திக்க நேரிட்டது. அவர்களின் தலைவரும், உருவப்படவியல் (Iconography) நிபுணருமான Dr.Jha, அவர்கள், நமது குரு பரம்பரையைப் பற்றி அறிந்து மிகவும் மகிழ்ச்சி அடைந்து, நமது குழுவை கங்கை ஆரத்தி முடிவில், 7:30 மணிக்கு, ஶ்ரீ லலிதா ஸஹஸ்ரநாமம் மற்றும் த்ரிஶதி சொல்வதற்காக அழைத்தார்.

நமது பல மாத உழைப்பு ஓர் மாபெரும் விழாவாக மலர்ந்தது. கொட்டகை விரிந்தது, ஹோம குண்டங்கள் அமைந்தன, கமண்டலங்கள் வந்தன, பூக்கள், வஸ்திரங்கள், ஆஸனங்கள்,பைகள் மற்றும் பல்வேறு ஹோம திரவ்யங்கள் பல்வேறு ஊர்களிலிருந்து வந்திறங்கின. பதாகைகள் எழும்பின, ஒலி, ஒளி அமைப்புகள் மற்றும் நெட்ஒர்க் அமைப்புகள் உருவாகின. மொத்தத்தில் ஒரு பூலோக கைலாஸம் உருவானது. இதற்கிடையில், நமது புத்தக வெளியீட்டுக்குழு (Publications Team) இராப்பகலாக உழைத்து, சிவ பூஜைக்கான ஒரு கையேட்டை பல்வேறு முக்கிய மொழிகளில் தயாரித்து அளித்தது. சமூக ஊடகங்களில் விழாவினை நேரலையாகப் பகிர ஒரு குழு சிறப்பாகச் செயலாற்றியது. விழாவிற்கு வருகை தந்த அனைவரும் இவ்வேற்பாடுகளின் மூலம் வேத கோஷத்தின் அதிர்வலைகளை தத்தம் மனதில் ஒரு பொக்கிஷமாக நிரந்தரமாக நிறுத்திக் கொண்டனர்.

கர்நாடக இசையின் மும்மூர்த்திகளில் ஒருவரான ஶ்ரீ முத்துஸ்வாமி தீக்ஷிதரின் குருவான ஶ்ரீ சிதம்பரநாத யோகி அவர்களின் ஜீவ சமாதி அதிஷ்டானமான ஶ்ரீ சக்ர லிங்கேஶ்வர ஸ்வாமி ஆலயத்தில் (ஹனுமான் கட்டம்) , மார்ச் 24 அன்று, ஒரு மங்களகரமான பௌர்ணமி மற்றும் ஶ்ரீ தீக்ஷிதரின் ஜயந்தி தினத்தில், ஶ்ரீ சக்ர நவாவரண பூஜையும் ஶ்ரீ தேவி மஹாத்ம்ய பாராயணமும் செய்யும் பெறு கிட்டியது. ஶ்ரீ தீக்ஷிதர் காஶியில் இசையும், வேதாந்தமும், யோகமும் பயின்றார். அவர், தனது குருவின் ஸமாதியில் ஶ்ரீ சக்ர லிங்கேஶ்வரரை (ஶிரஸில் ஶ்ரீ சக்ரம் உள்ள ஶிவலிங்கம்) ஸ்தாபித்துள்ளார்.

மார்ச் 25 அன்று வாஸ்து மற்றும் ராக்ஷோக்ன ஹோமங்களுடன் விழா தொடங்கியது. தினமும், காலையில் வைதீக நிகழ்வுகளும், ருத்ர பாராயணம், தேவி மஹாத்ம்ய பாராயணம், ருத்ரார்ச்சனை, பின் மாலையில் ருத்ரம், சமகம், கன பாராயணம், அனுக்ரஹ பாஷணம் என்று தொடர்ந்து

நிகழ்ச்சிகள் நடைபெற்றன. ஏப்ரல் 1 அன்று, 14641 ருத்ர ஜபங்களுடனும், கலசங்களுக்கு ஒரு பிரத்யேக கங்கா ஆரத்தியுடனும், 1000 பேருக்கு அன்னதானத்துடனும் அதிருத்ரம் பூர்த்தியானது. ஏப்ரல் 2 அன்று 160 ரித்விக்குகள் 11 ஹோமங்கள் செய்ய 1331 ருத்ர ஹோமங்கள் செய்யும் சங்கல்பம் நிறைவேறியது. ஏப்ரல் 3 அன்று, ஶதசண்டி ஹோமத்துடன், விழாவானது இனிதே நிறைவுற்றது.

எமது அன்பான ஆஶ்ரம சிஷ்யர்கள் இவ்விழாவில் மிகுந்த ஆர்வத்துடன் பங்கேற்றது, எங்களை நெகிழச் செய்கிறது.

நமது குருமண்டலம், காஶி விஶ்வநாதர், அன்னபூரணி, விஶாலாக்ஷி மற்றும் காஶியில் உறையும் முப்பத்து முக்கோடி தேவதைகளின் பேரருளில் திளைத்த நாம், எப்போதும் அவர்களின் அபார கருணைக்குப் பாத்திரமாகி, தர்மத்தின் பாதையில் வழி நடப்போமாக !!

விழாவின் சில காட்சிகளை இங்கு பகிர்கிறோம்.



**Namaskārams to Gurumaṇḍala**



**Sri Raghu & Smt Akhila Ranganathan seeking blessings from Sri Gnanananda Teertha Swamigal**



200 Bāna lingams from river Narmadā



143 Kalaśas getting ready



**Pūjā offered to the Holy Ganga**




**Kalaśas filled with the Ganges water being carried to the Yajñaśālā**



**Sri Yegnarathna deekshidar blessing Sri Raghu Ranganathan after rakṣābandhanam**



**Seeking blessings from Sri Ramakrishna Deekshidar and his wife Smt. Lalitha**



**Rudra Maṇḍalam setup**
**for the Ati Rudra Mahāyajñam**



**Pālikā Pujā**



**14,641 Rudra Japa in progress**





**Sri Gnanananda Teertha Swamigal offering garland to the Śivaliṅgam made from Narmadā Bāṇaliṅgam**





**Vilvārcanā to Śivaliṅgam**



**Deepārādhanā**




**Āratī being performed by the Varanasi Ganga Āratī Team members**





**Atirudram Mahāyajña**
**1,331 Rudra Homa being performed**
**by over 170 priests from all over India**





**Atirudram Mahāyajñam in progress**





**Mahāpūrṇāhuti being carried in pradakṣiṇā to the eleven homakuṇḍas.**





**Vasordhārā**



**Dampati pūjā to learned Ghanapāṭhīs from Vārāṇasī**



**Śata Caṇḍī Mahāyajñam**
**100 Caṇḍī Pārāyaṇam, 100,000 Navākṣarī Japam**
**10,000 Navākṣarī Homam, 10 Caṇḍī Homa**



**Kanyā Pūjā**



Śata Caṇḍī Mahā Pūrṇāhuti



Vasordhārā



**Abhiṣekam to Śivalingam**
**with energized water**
**from 143 Kalaśams**



# ஶிவ பூஜா விதானம்

போதாயனோக்த மஹாந்யாஸ ஸஹித ஸத்யோஜாத ஶிவ பூஜையை, நமது குருமண்டலத்தின் பாரம்பரியத்தில் வேரூன்றிய முறைப்படி, மிக விரிவாகவும், படிப்படியாகவும் விளக்கும் வகையில் இந்நூல் மிகக் கவனத்துடன் உருவாக்கப்பட்டுள்ளது. இந்த விரிவான புத்தகம் பின்வருவனவற்றை உள்ளடக்கியது:

* போதாயன மஹாந்யாஸம் மற்றும் அனுஷங்கத்துடன் கூடிய ருத்ர ப்ரஶ்னம்
* ஸத்யோஜாத ஷோடஶோபசார பூஜை
* நான்கு வெவ்வேறு முறையிலான ருத்ர அர்ச்சனை, மற்றும் ஹோம மந்த்ரங்கள்
* சமகம், புருஷ ஸூக்தம், ஶ்ரீ ஸூக்தம் மற்றும் ஹோம மந்த்ரங்கள்
* ஶ்ரீகண்டாதி மாத்ருகா ந்யாஸம், ஶிவ உபநிஷத் மற்றும் பில்வாஷ்டோத்தரம்

மிகவும் அரிதான போதாயன மார்க்க பூஜா விதிகளை விரிவாக விளக்கும் இந்நூல், ஆன்மீக அறிஞர்களுக்கும், தீவிர ஸாதகர்களுக்கும் ஶ்ரீவித்யா மற்றும் ஶிவ பூஜை செய்பவர்களுக்கும் விலைமதிப்பற்ற பொக்கிஷமாகும்.



ஶ்ரீ ரகு ரங்கநாதன் (ஸ்வபாவனந்த நாத:) மற்றும் ஶ்ரீமதி அகிலா ரங்கநாதன் (காமேஶ்வர்யாம்பா) ஆகிய இருவரும், பாஸ்கர ப்ரகாஶ ஆஶ்ரமத்தின் ஸ்தாபகரான பூஜ்யஶ்ரீ விமர்ஶானந்த நாதேந்த்ர ஸரஸ்வதி ஸ்வாமிகளின் மூத்த சீடர்கள் ஆவர். ரகு, ஶ்ரீ விமர்ஶானந்த நாதேந்த்ர ஸரஸ்வதி ஸ்வாமிகளின் பூர்வாஶ்ரமப் பேரனும், ஶ்ரீயக்ஞரத்ன தீக்ஷிதரின் மகனும் ஆவார்.. இவர் தமது குருவின் உபதேஶங்களை உலகம் முழுவதும் கொண்டு செல்வதுடன், BPA- வின் செயல்பாடுகளை, இந்தியா, USA மற்றும் கனடா பிரதேஶங்களில் மேற்பார்வையிட்டு வருகிறார்.

ரகு, தனது பால்யப் பருவமான ஏழாவது வயதிலேயே, குருகுலப் பயிற்சி முறையில், வேதங்களைக் கற்கத் தொடங்கினார். 1000-க்கும் மேலான சண்டி ஹோமங்கள், ஶ்ரீவித்யா ஹோமங்கள், மற்றும் ஶ்ரீவித்யா நவாவரண பூஜைகளில் தனது குருவுடன் ஆர்வத்துடன் பங்கேற்றார். 1988-ம் ஆண்டு, தனது 23-வது வயதில், ரகு அவர்கள், புது தில்லி காமாக்ஷி அம்மன் கோவிலில், முதல் முறையாக, சுயமாக ஶதசண்டி ஹோமம் நிகழ்த்தினார்.

1996-ம் ஆண்டு முதல், ரகு மற்றும் அகிலா அவர்கள், உலகம் முழுவதும் ஶதசண்டி, ஸஹஸ்ர சண்டி, லக்ஷ சண்டி, அதி ருத்ரம் மற்றும் ஶ்ரீ வித்யா நவாவரண பூஜைகளை நடத்தி வருகின்றனர். அவர்கள்நுணுக்கமான ஶ்ரீ வித்யா தத்துவங்களை,சுத்தமல்லி பரம்பரையின் (unbroken lineage) வழிமுறையில் ஏராளமான ஆஸ்திகர்களுக்கு, வேத பாடங்கள் ஶ்ரீ வித்யா தந்த்ர வகுப்புகள் மற்றும் தேவி மஹாத்ம்யம் ஆகியவற்றை பயிற்றுவித்து வருகின்றனர். அடிப்படையான தந்த்ரங்களில் அவர்களுக்குள்ள மாறாத பற்றும், அவர்களது ஆழ்ந்த அத்வைத ஞானமும் ஏராளமான ஸாதகர்களை அவர்கள் பால் ஈர்த்துள்ளது.